# ஐந்தாம் நாள்
# மறைபரப்பு பணிக்காக செபிப்போம்

**முன்னுரை :**

**நிலவைப்போல் அழகுள்ளவளாய்**

**கதிவனைப்போல் ஒளியுள்ளவளாய்**

**விடிகாலை வானம்போல் எழுந்துவரும் தாயே!**

**உலகம் வணங்கிடும் தாய்மரியே**

**உறவென தொடர்ந்திடும் முழுமதியே**

**அலை ஓசை என்றும் அன்பே உன்னை வாழ்த்திப்பாடுதே**

**மலைபோல வரும் துன்பமெல்லாம் தூரப்போகுதே**

**என் சோகம் என்னில் தீர உன் பாதம்**

**வந்துசேர உள்ளம் ஏங்குதே.... அம்மா உள்ளம் ஏங்குதே..**

கல்லும் முள்ளும் கடந்து எலிசபெத்தம்மாளைச் சந்தித்து மறைப்பரப்பு பணிக்கு திறப்பு விழா எடுத்தீரே. உந்தன் வீரத்தை, தைரியத்தை மறைபரப்புபணி செய்யும் எல்லாருக்கும் தாருமம்மா! கானாவூர் திருமணத்திலே இவர் சொல்வதெல்லாம் செய்யுங்கள் என்று உந்தன் மகனின் பெருமையை எல்லோரும் அறிந்து கொள்ள செய்தீரே. அந்த வார்த்தையை உளள்த்தில் இருத்தி எந்த தேசத்தில் வாழந்தாலும் எந்த சூழ்நிலையில் வாழ்ந்தாலும் வாழ்வால் மட்டுமே மறைபரப்பு பணியை செய்ய முடியும் என்ற உள்ளொளியை உளள்த்தில் பெற்று வாழ இந்நாளில் நாங்கள் வாழ வரம் வேண்டுகிறோம். தன்னிலே அழகும் தூய்மையும் ஒருங்கமைவும் கொண்ட பிரபஞ்சமும் தனது சரியான இயக்கத்தினால் நல்லவற்றை சரியானவற்றை இந்த உலகிற்கு கொடுத்துக் கொண்டே தான் இருக்கின்றது. நமது உடலே பிரபஞ்சத்தை பிரதிபலிக்கிறது எனின் நமது எண்ணங்களும், சொற்களும், வாழ்வும் நமது மறையை மானுடம் முழுவதும் பரப்புவதாய் அமையட்டும். இந்நாளிலே மறைபரப்புப் பணிக்கு பாதுகாவலர்களான புனித பிரான்சிஸ் சவேரியார், குழந்தை இயேசுவின் புனித தெரசாவையும் நாம் வேண்டுவோம். நம் அன்னைக்கு அனைத்து சகோதரிகளும் மலர்தூவி நன்றி சொல்லுவோம். மறைபரப்புபணிக்காக தங்களின் வாழ்வை அர்ப்பணித்த அருட்தந்தை அருள்தாஸ், அருட்தந்தை ஸ்டேன் சுவாமி, அருட்சகோதரி ராணி மரியா இன்னும் நமக்கு தெரிந்தவரக்ளையும் நினைவு கூர்ந்து இவர்களுக்காக நன்றி கூறி என்ன அழுகு உன் அருள் அழகு என்ற பாடலை பாடிக்கொண்டே மலர் தூவி அர்ப்பணிப்போம்.

**திருட்பா:**

அவனியைப் படைத்த இறைவனை நம்பி
அனைத்துமாய் அவரைப் பற்றியே வாழ்ந்து
ஆவியையும் அவர்க்காய் ஆசையாய்க் கொடுத்த
மறைப்பணியாளர்களே நீவிர் வாழ்க!

ஒளியைப் படைத்தவனின் வழியில் சென்று
ஒன்றாய் வாழும் கடவுளில் கரைந்து
ஒன்றித்து வாழ்ந்த மகான்களே
மறைப்பணியாளர்களே நீவிர் வாழ்க!

நிரந்தரமில்லா உலக வாழ்வில் பற்றின்றி
நிஜமில்லா உறவுவலையின் சிக்கலின்றி
நிலையில்லா பதவிப்புகழில் மயக்கமின்றி
மறைப்பணி ஆற்றுவோரே நீவிர் போற்றி!

வழியும் உண்மையும் ஆனவரை
வாழ்வில் சிக்கென பிடித்து மகிழ்ந்து
வருத்தங்கள் பலவற்றையும் வசந்தமாய் ஏற்று
மறைப்பணியாளர்களே நீவிர் வாழ்க!

மறைப்பணிக்குச் சக்திதரும் தந்தையே
மறைப்பணியாளரோடு உடன் நடக்கும் மகனே
மறைப்பணியாளரை ஊக்குவிக்கும் ஆவியே
மங்காத உம் புகழ் வாழ்க! வாழ்க! – ஆமென்.

## திருப்பாடல் :1

**முன்மொழி : அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு, அறுவடைக்கு தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள்.**

மறைப்பரப்புபணியின் வளர்ச்சிக்காக ஜெபிப்போம். வளர்ச்சியில்லை, வசதியில்லை, வாய்ப்புமில்லை. ஆனால் தளர்ச்சியின்றி மணம் பரப்பியது மறைப்பணி. இன்னல்கள், இடர்கள் இடையூறுகள் எனினும் இனிமையாய் நடந்தது மறைப்பணி. வேதனைகள், வேதகலாபனைகள் ஆயினும் வேரோட்டமாய் ஊன்றியது மறைப்பணி.

வரவேற்பாரில்லை, வாழ்த்துவார் இல்லை ஆனால் எட்டுத்திக்கையும் எட்டியது மறைப்பணி. இன்றையவிட அன்று அரசாலும் ஆள்வோராலும் மறைப்பணிக்கு வந்த எதிர்ப்புகள் அதிகம், தடைகள் அதிகம், இடர்கள் அதிகம். ஆனாலும் மறைப்பணியோ காட்டாற்று வெள்ளமாய் வேகமாக பரவியது. ஆனால் இன்றோ எல்லா வசதிகளும், தொலைதொடர்பு சாதனங்களின் பயன்பாடு அதிகமாக இருப்பினும், ஏனோ மறைப்பணியில் ஒருமந்தம். இருப்பினும் நல்ல உள்ளங்கள் மறைப்பணிக்காய் தங்களை அர்ப்பணிக்கிறாரக்ள். இவர்களின் பணிசிறக்கவும், நம் பணி பேச்சாக மட்டும் இல்லாமல் வாழ்வாக மலர நம் அன்னையிடம் மன்றாடுவோம்.

**பாடல் : திருப்பா மலர்- பக்கம் 125 – உம் பணி வாழ்வையே…**

## திருப்பாடல்: 2

**முன்மொழி: உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்.**

அயல் நாடுகளில் மறைப்பரப்பு பணிசெய்யும் நம் சபை சகோதரிகளுக்காக மன்றாடுவோம். வாழ்க்கை என்பது சின்னஞ்சிறு மெழுகுவர்த்தி அல்ல. அது பட்டொளி வீசும் தீப்பந்தம். எதிரக்காலத் தலைமுறையின் கைகளில் அதை தருவதற்கு முன் அதிகம் சுடர்விட்டு ஒளிதருமாறு செய்ய விரும்புகிறவர் எவரோ அவரே சிறந்த மறைப்பணியாளர். காற்றடிக்கும் திசையை மாற்ற முடியாது. ஆனால் காற்றடிக்கும் திசைக்கு ஏற்ப மரத்தை மாற்றிக் கொளள்லாம். எலிசபெத் கருவுற்றிருக்கிறார் என்ற செய்தி கேட்டவுடன் எல்லாவற்றையும் கடந்து விருப்பமானவைகளை இழந்து தேடிசென்று உதவி செய்கின்றாள் நம் அன்னை. அதுபோல் தம் உறவுகள், நலம் விரும்பிகள், விருப்பமான உணவு வகைகள், இயற்கை சூழ்நிலைகள் எல்லாவற்றையும் தாண்டி அறியாத மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றையும் ஏற்றுக்கொண்டு பணி செய்பவர்கள் தான் நம் சகோதரிகள். அவர்கள் அனைவரையும் நினைவு கூர்வோம். மகிழ்ச்சியான நேரங்களில் கடவுளை புகழவும், இன்னல்படும் கனங்களில் கடவுளைத் தேடவும், அமைதி நிலவும் வேளைகளில் கடவுளைத் தொழவும், துயரமான பொழுதுகளில் கடவுளை நம்பவும் அன்னை மரியாளை போன்று இதோ உமது அடிமை என்ற மனநிலையில் மறைப்பணி செய்ய அன்னையிடம் வரம் வேண்டுவோம் இப்பாடல் வழி.

**பாடல்: தெய்வீகத் தோழன் நீரே….(திருப்பாமலர் : பக்- 29)**

**திருப்பாடல்: 3**

**முன்மொழி : உங்கள் நற்செயல்களைக் கண்டு மக்கள் உங்களைப் புகழ்வார்கள்.**

இறைவனே நம்மை தேடிவருவார். கோடாரி வலுவானதுதான், ஆனால் அதுமுடியை வெட்டாது. பிளேடு கூர்மையானது தான், ஆனால் அது மரத்தை வெட்டாது. குழுமங்களில் வாழும் நாம் ஒன்றாக இணைந்து மகிழ்வோடு, நிறைவோடு வாழும் போது அதுவே மறைப்பணியாக, மற்றவர்களுக்கு மாதிரியாக, நல்வார்த்தைகளால் வாழ்வு கொடுப்பதாக அமைகிறது. நம்மையும், பிறரையும் அன்புசெய்து, நல்லவரையும், பகைவரையும் நேசித்து, பாராட்டுவோரையும், குறை சொல்பவரையும் ஏற்றுக்கொண்டு, கைவிடப்பட்டோருக்கும், புறக்கணிப்பட்டோருக்கும் வாழ்வு கொடுத்து, தனிமையிலும் - மன அழுத்தத்திலும் இருப்போர்க்கு விடுதலை கொடுத்து வாழ்வதே மறைப்பணி. படைப்பு நற்செய்தியை கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறது. படைப்பின் பெரும் அங்கமான நாம்தான் நம்மைப் பற்றிய பிறரைப் பற்றிய படைப்புப் பற்றிய நல்ல செய்தியை பிறருக்குக் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம். இப்பணி செய்ய வரம் வேண்டி திருப்பாடல் 103-ஐ அனைவரும் இணைந்து செபிப்போம். இறைவனின் அன்பையும் ஆசீரையும் அன்னைவழி பெற்றுக் கொள்வோம்.

**அருள்வாகக்: மத்: 10:16-20**

**சிறுமறுமொழி :**

முதல் : நற்செய்தி அறிவிப்போரின் மலரடிகள் எத்துனை அழகானவை.

எல் : நற்செய்திஅறிவிப்போரின் மலரடிகள் எத்துனைஅழகானவை.

முதல் : நாங்கள் கண்டதையும் கேட்டதையும் அறிவிக்காமல் இருக்க எங்களால் முடியாது.

எல் : நற்செய்தி அறிவிப்போரின் மலரடிகள் எத்துனை அழகானவை.

முதல் : தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் ….

எல் : நற்செய்தி அறிவிப்போரின் மலரடிகள் எத்துனை அழகானவை.

**கன்னிமரியாவின் பாடல்:**

வாழ்க்கை என்பது ஒவ்வொரு நொடியிலும் சென்றுவரும் மூச்சு போன்றது. ஒவ்வொரு நொடியும் நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதன் கோர்வையே வாழ்க்கை. ஒவ்வொரு நொடியும் நாம் விடும் மூச்சு, மறைபணியை

மையமாகக் கொண்டதாகவும், மனிதத்தை வளர்ப்பதாகவும் அமைய மனித நேய மாண்புள்ள அன்னையின் அருள் வேண்டி பாடுவோம்.

**பாடல் : என் ஆன்மா ஆண்டவரை…**

**முன்மொழி: கருவறை முதல் கல்லறை வரை இறைவார்த்தையை தியானித்து வாழ்ந்த, வாழ வைத்த அன்னையே நீர் வாழ்க.**

**மன்றாட்டு :**

**பதில் : மறைப்பணியின் தொடக்கமாகிய இறைவா எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.**

- எங்களை உமது சாயலாகப் படைத்த இறைவா! எம் திருச்சபை தலைவர்கள், மறைப்பணியாளர்கள் எல்லோரின் வாழ்விலும் உமது அன்பும், அரவணைப்பும் துன்பம் வந்த போதிலும் உமக்கென எல்லாவற்றையும் தாங்கிக்கொள்ள உறுதியான உள்ளம் தரவேண்டுமென்று அடைக்கல அன்னை வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

- அமைதியின் தெய்வமே இறைவா! எம் நாட்டில் மறைப்பணிக்கு எதிராக எழுகின்ற எல்லா இடர்பாடுகளையும் ‘‘வாழ்பவன் நான் அல்ல, என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே’’ என்ற மனநிலையோடு போராட மனதைரியம் தரவேண்டுமென அடைக்கல அன்னை வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

- அடைக்கலம் தேடுகின்ற தேவைபட்டுகின்ற எல்லோருக்கும் அடைக்கல அன்னையின் மறு உருவங்களாக பணிசெய்ய எங்களை அழைத்த இறைவா! ஏம் சபை சகோதரிகள் செய்கின்ற அனைத்துப் பணிகளையும் சிறப்பாக மறைப்பணியை ஆசீர்வதித்து மறைப்பணி வளர அருள்தர எம் அடைக்கல அன்னை வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

- உயிரும் உயிர்ப்பும் நானே என்று கூறிய இறைவா! மறைப்பரப்பு பணிக்காக தம் வாழ்வை அர்ப்பணித்து இறந்த அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், பொதுநிலையினர்களின் ஆன்மா உம்மிலே அமைதிபெற அடைக்கல அன்னை வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**( தேவையான மன்றாட்டுகளை இணைத்துக் கொள்வோம் ) மறைப்பணி நமது உயிர்பணி என்பதை உணர்ந்து வாழ வரம் வேண்டி ஆண்டவர் கிறிஸ்து கற்றுக்கொடுத்த செபத்தை செபிப்போம்.**

## இறுதிசெபம் :

அம்மா மரியே அடைக்கல சபையின் தாயே! விண்ணொளி வீசும் விண்ணகச்சுடரே! உலக இன்பங்களை உதரிவிட்டு உன்னதப் பணிக்காய் வாழ்வை அர்ப்பணித்த அனைவருக்காகவும் நன்றி கூறுகிறோம். உம்மை மட்டுமே நம்பி மறைப்பணியாற்றும் அனைவரையும் ஆசீர்வதியும். பணிவாழ்வில் அவர்களோடு நீர் பயணித்து, பாதுகாப்பளித்து பலன்தரும் பணியைப் பாரெங்கும் ஆற்ற ஆவியின் அருள் வரங்களை நிறைவாய் கொடுத்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்